அமைத்துத்தரப்பட வேண்டும் என்பது இதர நிபந்தனைகளாகும். சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள், மத்திய சட்ட அமைச்சர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மற்றும் மாநில ஆளுநர் ஆகியோர்களுக்குக் கடிதம் எழுதினர். மதுரையில் உயர்நீதிமன்ற பிரிவு ஒன்றை அமைப்பதற்கான தகுதியான இரண்டு மூன்று இடங்களைத் தெரிவிக்குமாறு சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளர் தமிழக அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மதுரையில் பிரதான இடத்தில் உயர்நீதிமன்ற பிரிவு ஒன்றை அமைக்க வேண்டுமென்று சென்னை உயர்நீதிமன்றம் விரும்புகிறது. மாநில அரசு ஓரிரு இடங்களைத் தேர்வு செய்து, அந்த இடங்கள் பொருத்தமானதுதானா என்பது குறித்து உயர்நீதிமன்றத்தின் கருத்தை தமிழக அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. உயர்நீதிமன்றப் பிரிவு ஒன்றை மதுரையில் அமைப்பதற்காக அனைத்து அடிப்படை வசதிகளையும் விரைவாக செய்துதர மாநில அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். தென் மாவட்ட மக்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் மதுரையில் சென்னை உயர்நீதிமன்றப் பிரிவு ஒன்றை அமைப்பதற்காக எல்லா முயற்சிகளையும் விரைந்து செயல்படுத்த அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது.

5. அறிக்கைகள் அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. வே. கண்ணன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

திரு. வே. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1995-96 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறுபத்தெட்டு முதல் எழுபத்திரெண்டு வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சட்டப் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு, 1995

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்ட அமைச்சர்.